# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 43/2021 நாள்.09.02.2026

## DW1- திரு.தங்கமோகன் , த/பெ. திரு.பெரியசாமி

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வாதிகள் என்னுடைய சகோதரிகள் என்றால் ஆமாம். வழக்கு போட்ட என் சகோதரிகள் மூவர் மற்றும் நாங்கள் எத்தனை பேர் வாரிசுகள் என்றால் நாங்கள் இரண்டுபேர் மொத்தம் ஐந்து. என் தகப்பனார் பெரியசாமி தாவா சொத்தை எந்த வருடம் வாங்கினார் என்றால் அவர் வாங்கவில்லை அப்பாயி வாங்கினார். அவர் பெயர் என்ன என்றால் துளசியம்மாள். அப்பாயிக்கு அப்பா மட்டும் வாரிசு என்றால் ஆமாம். என் அப்பா எங்கு வேலையில் இருந்தார் என்றால் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி. அவர் உயிருடன் இருக்கும்போது என் சகோதரிகள் மற்றும் எங்களுக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார் என்றால் ஆமாம். தாவா சொத்து என் அப்பாயிக்கு சொந்தமான சொத்து என்பதால் அப்பாயிக்கு பிறகு அப்பா அனுபவித்தார் என்றால் ஆமாம். என் அப்பா உயிருடன் இருக்கும் வரை ஏற்பாடு செய்யாமல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். வழக்கிடைசொத்திற்கு வாதிகள் மற்றும் நாங்கள் சட்டப்படியான வாரிசு என்றால் ஆமாம். வழக்கிடை சொத்தில் மொத்தம் எத்தனை கடை உள்ளது என்றால் 12கடைகள். 3 முதல் 12 பிரதிவாதிகள் வழக்கிடை சொத்தின் வாடகைதாரர்கள் என்றால் ஆமாம். வழக்கிடை சொத்தின் வாடகைதாரரிடமிருந்து வாடகையை நாளது தேதிவரை நானும் எனது சகோதரரும் வசூல் செய்கிறோம் என்றால் ஆமாம். 3 முதல் 12 பிரதிவாதிகளிடமிருந்து மாதம் 62500 ரூபாய் வாடகை வாங்குகிறோம் என்றால் சரியல்ல, 20500 வாங்குகிறேன். வழக்கிடை சொத்து மெயின்ரோட்டில் நீதிமன்றத்திற்கு அருகே சிவாஜி சிலைக்கு எதிரே உள்ளது என்றால் ஆமாம். 12 கடைக்கும் குறைந்தபட்சம் 5000 முதல் 10000 வரை வாடகை வரக்கூடிய சொத்துக்கள் என்றால் தெரியவில்லை. அதேபோல் அதில் எத்தனை ஜெராக்ஸ் கடை என்றால் ஒன்று, டீக்கடை ஒன்று, சலூன் கடை ஒன்று, சுவிட்ச் போர்டு கட்டிங் கடை ஒன்று மற்றவை வழக்கறிஞர் அலுவலகம். 12பேருக்கு வாடகைவிட்டதாக சொல்லியுள்ளேனே அதற்று எழுத்து பூர்வமான ஒப்பந்தம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஒப்பந்தத்தை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அந்த ஆவணங்களை தாக்கல் செய்தால் உண்மையான வாடகை எவ்வளவு என்று தெரிந்துவிடும் என்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தொடர்ந்து வாடகை வசூல் செய்த வகையில் 12,69,360/- கொடுக்கவில்லை என்று சொல்லி கடந்தகால வாடகை பாகம்கோரி அதற்கும் வாதிகள்

நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்றால் தெரியவில்லை. வழக்கிடை சொத்து கடை என் அப்பா வருமானத்திலிருந்து கட்டபட்டவை என்றால் சரியல்ல. எந்த வருடம் கட்டபட்டது என்றால் 2003. மொத்த எத்தனை சதுரஅடிக்கு கட்டடம் கட்டபட்டது என்றால் 6084 சதுரஅடி நிலம். அதில் எவ்வளவு சதுரடியில் அடி கட்டம் கட்டபட்டது என்றால் 12 கடைகள் 1000 சதுரஅடியில் உள்ளது. 6000சதுரடியில் 1000 கடை போக மீதி என்னவாக உள்ளது என்றால் 1100 சதுரஅடி பழைய வீடு உள்ளது. மேற்படி 2100 சதுரஅடி போக மீதி என்னவாக உள்ளது என்றால் காலியிடம். 1100 சதுரஅடி வீடு என்பது தரைதளம் மட்டும்தான். 12கடைகளும் எத்தனை தளம் என்றால் 2 தளம். 1000 சதுரஅடி என்பது தரைதளம் அதில் முதல் தளம் 1000 சதுரஅடி. வழக்கிற்கான பி.சா.ஆ. 1 முதல் 4 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனே அது எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் அப்பா இறப்பதற்கு முன்பு காசோலை கொடுத்தும் எழுதி கொடுத்தும் கடன் வாங்கியிருந்தார் அந்த ஆவணங்கள். பி.சா.ஆ.1 கடன் வாங்கியதாக உள்ளது என்றும், பி.சா.ஆ.2 கடன் அடைக்கபட்டதாக உள்ளது என்றும் அதில் என் பெயர் இல்லை என்றால் ஆமாம். பெரியசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் 17.3.1999. ஒரு பெந்தகம் இருக்கும் போதே 2வது பெந்தம் என் அப்பா எழுதி வைத்தார் என்றால் ஆமாம். பி.சா.ஆ.3 ஆவணம் 2000த்தில் தீர்க்கபட்டுள்ளது என்றால் ஆமாம். என் 2வது சகோதரி மிலிட்ரியில் கர்னலாக இருந்தார் என்றால் ஆமாம். 1வது சகோதரி திருச்சியில் உள்ளார் என்றால் ஆமாம். எங்கள் இரண்டுபேருடைய வருமானத்தை விட 1, 2 வாதிகள் வருமானம் அதிகம் என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புவரை பழக்கவழக்கம், பேச்சுவார்த்தை, உறவுமுறை இருந்தது என்றால் ஆமாம். அதைபோல் கொடுக்கல், வாங்கல் எங்களுக்குள் இருந்தது என்றால் இல்லை. அப்பாவால் வாங்கபட்ட கடனை தீர்ப்பதற்காக 2வது வாதி எங்களிடம் ரூபாய் 1,80,000 கொடுத்து அந்த பணம் மூலம் தீர்க்கபட்டது என்றால் சரியல்ல. எந்த வருடம் கடன் வாங்கினேன் என்றால் 2003.எவ்வளவு என்றால் ரூ.6,75,000/-. பெரியசாமியின் வாரிசுகள் எல்லோரும் கையெழுத்து போடவேண்டும் என்றால் ஆமாம். 3வது வாதி என் சகோதரி கையெழுத்து போடாமல் நானே கையெழுத்துபோட்டு கடன் வாங்கினேன் என்றால் இல்லை. கடையிலிருந்து வரும் வருமானத்தை கொண்டு கடன் அடைக்கவேண்டும் என்று பேசபட்டதன் அடிப்படையில் மற்ற சகோதரிகள் கடன் பெறுவதற்கு சம்மதம் சொல்லி கையெழுத்து செய்தார்கள் என்றால் இல்லை. வழக்கிடை சொத்து கடைகள்வாடகை எவ்வளவு வருகிறது என்று நாளது தேதிவரை நான் கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எல்ஐசி கடன் என்னால் அடைக்கவில்லை என்றும், கடையின் வருமானத்தை நானும் என் அண்ணனும் எடுத்துகொண்டோம் என்றும், கடன் அடைக்காமல் விட்டு 2ஆம்

வாதிதக்காக அவரது கணவர்நேரடியாக கொடுத்த பணம் ரூ.5,00,000 பெற்று கடனை அடைத்துவிட்டு 2ஆம் வாதியிடம் பெற்ற கடனை திருப்பிகொடுக்காமலும், வாதிகளுக்கு வழக்கிடை சொத்தில் பாகம் கொடுக்காமலும், நாளது தேதிவரை வழக்கிடை சொத்தில் வரும் வருமானத்திற்கு கணக்கு கொடுக்காமலும் ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள்சட்டபடியான வாரிசுகள் என்பதால் என் அப்பாவின் இறப்பு வரை சட்டபடியான ஆவணம் எழுதி வைக்காததால் வாதிகளுக்கு 3/5 பாகம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.09 16:47:43 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**